**புலமைச் சொத்து நிதியத்திம் - 2020**

------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புலமைச் சொத்து நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2003 இன் 36 ஆம் இலக்க புலமைச் சொத்து சட்டத்தின் xxxvii ஆம் அத்தியாயத்தின் 176(6) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது

விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் போது மூன்று வகை சொத்துக்களின் மீள்மதிப்பீட்டிலிருந்து உருவாகிய ரூபா 5,578,250 மீள்மதிப்பீட்டு இலாபம் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மீள்மதிப்பீட்டு மிகையாக தனித்தனியாகக் காட்டப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அது திரண்ட பற்றாக்குறைக்கு சீர்செய்யப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டு கணக்குகளுக்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது மாதிரியில் திருத்தம் செய்து இதனை சமர்ப்பிக்குமாறு கணக்காளர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். | மீள்மதிப்பீட்டு இலாபம் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மீள்மதிப்பீட்டு மிகையாக தனித்தனியாகக் காட்டப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 67,051,672 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 87,006,250 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 19,954,578 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 16,182,956 ஆல் வீழ்ச்சியடைந்தமை மற்றும் செலவினம் ரூபா 3,771,622 ஆல் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கைத்தொழில் திட்டங்களை சர்வதேச ரீதியாக பதிவு செய்வதற்கான வசதிகளை வழங்கும் ஹேஜ் முறைமையை (Hage System) அணுகுதல் தொடர்பான செயற்திட்ட அறிக்கையொன்றை தயாரிப்பதற்கான திட்டங்கள் வரையப்பட்டிருந்த போதிலும் ஆரம்ப நடவடிக்கைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. | தற்போது நாட்டில் உள்ள சம்பந்தப்பட்ட துறையின் தொடர்புடைய சட்ட நிலை, தொழில்நுட்ப சிக்கல்கள், தேவைகள் மற்றும் போக்குகளை ஆய்வு செய்வதன் மூலம் இது மேற்கொள்ளப்பட வேண்டும். காப்புரிமம் மற்றும் கைத்தொழில்துறை வடிவமைப்பு பதிவுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதால் இந்நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நியாயமான காலமொன்று தேவைப்படுகின்றது. | நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வர்த்தக சின்னம் பதிவு செய்யப்பட்ட 5,932 சந்தர்ப்பங்களில், 760 சந்தர்ப்பங்கள் 2010 இற்கு முன்னர் பெறப்பட்ட விண்ணப்பங்களுடன் தொடர்புடையவையாக காணப்பட்டதுடன் வர்த்தக சின்ன பதிவு செயன்முறையின் தன்மை மற்றும் சிக்கலான தன்மை காரணமாக தாமதம் ஏற்பட்டதாக பணிப்பாளர் நாயகம் கருத்து தெரிவித்திருந்திருந்தார். எனினும், புலமைச் சொத்து சட்டத்தின் 118(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் வர்த்தக சின்னமொன்றின் செல்லுபடியாகும் காலம் பதிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 10 ஆண்டுகள் வரை வரையறுக்கப்பட்டுள்ளதுடன் இதன் காரணமாக விண்ணப்பம் செய்யும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் பதிவு வழங்கப்பட்டிருந்ததுடன் வர்த்தக சின்னங்கள் அவற்றை பதிவுசெய்யும் நேரத்தில் இரத்து செய்யப்பட்டிருந்தன. | 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 5932 சான்றிதழ்களில், ஏறத்தாழ 12 சதவீத (760) சான்றிதழ்களை வழங்குவதில் பதிவின் செல்லுபடியாகும் காலப்பகுதி முடிவடைந்தமை, வர்த்தக சின்ன பதிவு செயன்முறையின் தன்மை மற்றும் அதன் சிக்கலான தன்மை மற்றும் நிறுவகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்கள் ஆகியவற்றின் காரணமாக தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் இந்த தாமதம் பதிவுக் கட்டணக் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்படாததால் 10 ஆண்டு கால எல்லையையும் மீறக்கூடும். | புலமைச் சொத்து சட்டத்தின் 118(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் வர்த்தக சின்னத்தின் செல்லுபடியாகும் காலப்பகுதி பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 ஆண்டுகள் வரை வரையறுக்கப்பட்டிருப்பதால் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்த திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் பதிவு வழங்கப்படுதல் காரணமாக ஏற்படும் தாமதங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆண்டின் போது வர்த்தக சின்ன பதிவிற்காக பெறப்பட்ட 9,593 விண்ணப்பங்களில் 6,294 விண்ணப்பங்களின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது வர்த்தக சின்னம் பதிவுசெய்யப்படும் நிலையை அடைந்திருக்கவில்லை. | கொவிட் 19 தொற்றுநோய் பரவியதன் காரணமாக சாதாரண உத்தியோகபூர்வ கடமைகள் மட்டுப்படுத்தப்பட்டதாலும், வீட்டிலிருந்து வேலை செய்யும் ஏற்பாட்டின் கீழ் கடமைகளின் செயலாற்றலில் ஏற்பட்ட வரையறைகளினாலும் இந்த நிலைமை ஏற்பட்டது. | ஆண்டின் போது பெறப்பட்ட விண்ணப்பங்கள் அந்த ஆண்டிலேயே பதிவு செய்யப்படும் நிலை வரை கையாளப்பட வேண்டும். |
| (இ) | பதிவு செய்வதற்குத் தகுதியான விண்ணப்பங்கள் பிரசுரத்திற்கான கட்டணத்தை கொடுப்பனவு செய்த பின்னரே பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அந்தக் கட்டணத்தைச் செலுத்திய 3466 | சான்றிதழ்கள் அச்சிடப்பட்டிருக்காததாலும், பதிவு பூர்த்தி செய்யப்பட்டிருக்காததாலும், வர்த்தக சின்னங்களை பதிவு செய்வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தடுப்பதற்காக | பிரசுரிப்பதற்கான கட்டணத்தை கொடுப்பனவு செய்த பின்னர் பதிவு செய்வதற்குத் தகுதியான விண்ணப்பங்களைப் பதிவு செய்வதற்கு துரித |

| | | | |
|---|---|---|---|
| | விண்ணப்பங்களை கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவு செய்ய முடியாதிருந்தது. | 2019 இல் பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதற்கு நிறுவகத்தில் தனியான பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | காப்புரிமத்திற்காக (patent) விண்ணப்பங்களை மேற்கொள்ளும் ஆண்டில் காப்புரிமங்களை வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 273 காப்புரிமங்களில், 258 காப்புரிமங்கள் 2008 முதல் 2018 வரை மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு உரியதாகும். அதற்கிணங்க அதிக தாமதத்திற்குப் பின்னர் காப்புரிமங்கள் வழங்கப்பட்டிருந்தன. | காப்புரிமத்தை வழங்குவதற்கு முன்னர் விண்ணப்பத்துடன் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையின் சரியான தன்மை மற்றும் அதன் மூலம் காப்புரிம உரிமை கோரப்படுதலுடன் தொடர்புடைய தொழில்நுட்பங்களின் புதுமை/ புதுமையான படிமுறைகள் ஆராயப்படுவதுடன் இச் செயன்முறையில் எழுகின்ற பிழைகள், பொருள் விடயங்கள் மற்றும் திருத்தங்கள் தொடர்பான விடயங்களும் ஆராயப்படும். மேலும், விண்ணப்பதாரர்கள் ஆவணங்களை முறையாகச் சமர்ப்பிக்கத் தவறியதன் காரணமாக பல உள்ளூர் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களுக்கு காப்புரிமங்களை வழங்குவதற்கு கணிசமானளவு காலம் எடுக்கின்றது. | காப்புரிமத்திற்காக விண்ணப்பம் மேற்கொள்ளப்படும் ஆண்டில் காப்புரிமங்களை வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |